මහජන බැංකුව | மக்கள் வங்கி

PEOPLE'S BANK

# கேள்விப்பத்திர அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை வழங்குதல், பராமரித்தல் மற்றும் சேவை செய்தல் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உள்ளூர் வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றது.

| கேள்விப்பத்திர இலக்கம் | பொருள் பற்றிய விபரம் | விலைகூறல் பிணைப்பொறுப்பு முறியின் பெறுமதி | விண்ணப்பப்படிவம் வழங்கப்படும் இறுதி திகதி | கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி |
|---|---|---|---|---|
| P-168/2026 | Purchase of 200 Nos. Automated Teller Machines (ATMs) | மொத்த மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 3% | 2026.06.26ஆம் திகதி பி.ப.2.00 மணி | 2026.06.30ஆம் திகதி பி.ப.2.00 மணி |

1. கேள்விப்பத்திர விண்ணப்பங்களை 2026.06.09ஆம் திகதி முதல் 2026.06.26ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை இல: 30/101, கியூ வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் வழங்கல் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன், ஒரு கேள்விப்பத்திர விண்ணப்பத்திற்காக ரூ.5,000/- மீளச் செலுத்தப்படாத கேள்விப்பத்திர வைப்புத் தொகையொன்றைச் செலுத்த வேண்டும். விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளுவதற்காக தமது நிறுவனத்தின் கோரிக்கை கடிதமொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

2. முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்களை இரண்டு பிரதிகளாக மக்கள் வங்கி, வழங்கல் திணைக்களம், 30/101, கியூ வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இட வேண்டும். இன்றேல் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இந்தக் கேள்விப்பத்திரம் 2026.06.30ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியன்று பிற்பகல் 2.00 மணியின் பின்னர் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படாமலே மீள ஒப்படைக்கப்படும்.

3. அனைத்து அல்லது எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது கேள்விப்பத்திரத்தை இரத்துச் செய்யும் அல்லது எவ்வித காரணமும் காட்டாமல் கேள்விப்பத்திரமொன்றின் எந்தவொரு பகுதியையும் ஏற்றுக்கொள்ளும் உரிமை மக்கள் வங்கிக்கு உண்டு. ஆகக் குறைந்த விலையை வழங்குவது மாத்திரம் கேள்விப்பத்திரத்திற்கு தகைமை பெறுவதற்கு போதாது.

4. இது தொடர்பான மேலதிக விபரங்களை பிரதம முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

**பிரதம முகாமையாளர் (வழங்கல்)**
**மக்கள் வங்கி,**
**வழங்கல் திணைக்களம்,**
**30/101, கியு வீதி, கொழும்பு 02.**

**தொலைபேசி இலக்கம் : 2439577 - 8**
**தொலைநகல் : 2439576**
**இணையத்தளம் : www.peoplesbank.lk**
**மின்னஞ்சல் : supplies@peoplesbank.lk**